டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் வெல்லர்ஸ்
agridoctor.in | 25.11.2026 புதன்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 132 | Madurai | Online Edition

தேசிய பால்வள தினம் நாளை கொண்டாடப்பட உள்ளது


புது தில்லி, நவ.24

மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வள அமைச் சகத்தின் கால்நடை பராமரிப்பு, பால்வளத்துறை சார்பில் தேசிய பால்வள தினம் 2026, பீகார் மாநிலம் பாட்னாவில் உள்ள பாபு சபாகரில் 26.11.26 அன்று கொண்டாடப்பட உள்ளது. மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் இதில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கிறார். பீகார் முதலமைச்சர் சாம்ராட் சௌத்ரி, மத்திய இணையமைச்சர் பேராசிரியர் எஸ் பி சிங் பாகேல், பீகார் மாநில பால்வளத் துறை அமைச்சர் நந்த் கிஷோர் ராம் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில், கால்நடை, பால்வளத் துறையின் உயரிய விருதான தேசிய கோபால் ரத்னா விருதுகள் 2026-ஐ மத்திய அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் வழங்குகிறார். இந்நிகழ்ச்சியில், பால்வள மேம்பாட்டுக்கான தேசியத் திட்டத்தின் கீழ் தரவு செய லாக்கம் விநியோகம், பால் சேகரிப்பு அலகுகள், தாது உப்புக் கலவை ஆலைகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், பாட்னா பிட்டாவில் நாளொன்றுக்கு 2 லட்சம் லிட்டர் திறன் கொண்ட பால் பதனப்படுத்தும் ஆலை ஆகியவை நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட உள்ளன. மேலும், பால் கூட்டுறவு சங்கங்களின் தர மதிப்பீட்டிற்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகள், இணையதள சேவை, வளர்ச்சியடைந்த இந்தியா 2047 இலக்கை நோக்கிய பருவநிலை மாற்றத்தைத் தாங்கும் கால்நடைகள் மற்றும் பால்வளத் துறைக்கான செயல்திட்டம், அடிப்படை கால்நடை பராமரிப்புப் புள்ளி விவரங்கள் 2026 ஆகியவையும் வெளியிடப்பட உள்ளன.

வெண்மைப் புரட்சியின் தந்தை டாக்டர் வர்கீஸ் குரியனின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் தேசிய பால்வள தினம் கொண்டாடப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கு பத்மஸ்ரீ முனைவர் அசோக் குமார் சிங் வருகை



கோயம்புத்தூர், நவ.24 மதராஸ் வேளாண் மாணவர்கள் கூட்டமைப்பு (MASU) சார்பில், புகழ் பெற்ற வேளாண் விஞ் ஞானியும், நெல் பயிர் மேம்பாட்டுத் துறையில் சிறந்து விளங்குபவரும், புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் (ICAR-IARI) முன்னாள் இயக்கு நருமான பத்மஸ்ரீ முனைவர் அசோக் குமார் சிங், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள கூட்டமைப்பு அலுவலகத்திற்கு வருகை தந்தார். அவரை கூட்டமைப்பின் தலைவர் முனைவர் செந்தில் நடேசன் வரவேற்றார்.

இந்நிகழ்வில் கூட்டமைப்பின் துணைத் தலைவர் முனைவர் எம்.கார்த்திகேயன், பொருளாளர் முனைவர் பாலாஜி கண்ணன், செயலாளர் முனைவர் கே.பூமிராஜ், இணைச் செயலாளர் முனைவர் ஆர்.கங்கை செல்வி மற்றும் மதராஸ் வேளாண்மை இதழின் (Madras Agricultural Journal – MAJ) தலைமை ஆசிரியர் முனைவர் வி.ராஜன் பாபு ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்வருகையின் போது, கூட்டமைப்பின் நிர்வாகக் குழு உறுப் பினர்கள், 1913 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மதராஸ் வேளாண் மைப் இதழின் சிறப்புமிக்க வரலாறு மற்றும் பாரம்பரியம் குறித்து முனைவர் அசோக் குமார் சிங்கு எடுத்துரைத்தனர். வேளாண் ஆராய்ச்சி மற்றும் அறிவியல் தகவல் பரிமாற்றத்தில் இதழ் நீண்டகாலமாக ஆற்றி வரும் பங்களிப்பு, காலப்போக்கில் அதன் வளர்ச்சி மற்றும் வேளாண் அறிவைப் பரப்புவதில் அதன் முக்கியத்துவம் ஆகியவை எடுத்துரைக்கப்பட்டன. மேலும், பல பத்தாண்டுகளாகப் பாதுகாக்கப்பட்டு வரும் இதழின் பழமையான தொகுப்புகளும் அவருக்குக் காட்சிப்படுத்தப்பட்டன.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

இதனைப் பாராட்டிய முனைவர் அசோக் குமார் சிங், இதழின் வரலாற்றுச் சிறப்பையும் அதன் அரிய ஆவணத் தொகுப்பு களையும் வெகுவாகப் பாராட்டினார். தனது நீண்டகால வேளாண் ஆராய்ச்சி அனுபவத்தின் அடிப்படையில், இதழின் கல்விசார் தரத்தை உயர்த்துதல், வெளியீட்டுத் தரத்தை மேம்படுத்துதல், தேசிய மற்றும் சர்வதேச அளவில் அதன் அங்கீகாரத்தை அதிகரித்தல் மற்றும் பரந்த அளவிலான ஆராய்ச்சியாளர்களைச் சென்றடைதல் தொடர்பாகப் பல்வேறு பயனுள்ள ஆலோசனை களையும் வழிகாட்டுதல்களையும் வழங்கினார். இவ்வருகை, மதராஸ் வேளாண்மைப் பருவ இதழின் எதிர்கால வளர்ச்சி குறித்த கருத்துப் பரிமாற்றத்திற்கும், சிறந்த வேளாண் விஞ்ஞானியின் அனுபவம் மற்றும் வழிகாட்டுதலைப் பெறுவதற்கும் கூட்டமைப்பின் நிர்வாகக் குழுவினருக்கு ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

மேலும், இதழின் வரலாற்றுப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதோடு, அதன் கல்விசார் சிறப்பையும் அறிவியல் வெளியீட்டுத் தரத்தையும் மேம்படுத்துவதில் கூட்டமைப்பு தொடர்ந்து மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு இந்நிகழ்வு மேலும் வலுசேர்த்தது. இந்நிகழ்வின் நிறைவாக, பத்மஸ்ரீ முனைவர் அசோக் குமார் சிங்குடன் கூட்டமைப்பின் நிர்வாகப் பொறுப்பாளர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு வேளாண் மாணவர்கள் வருகை!



தூத்துக்குடி, நவ.24

தூத்துக்குடி மாவட்டம், வ.உ.சிதம் பரனார் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய நான்காம் ஆண்டு வேளாண் மாணவர் களின் கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், திருவட்டார் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத் திற்கு (PACS) மாணவர்கள் களப்பயணம் மேற்கொண்டனர்.

இந்த வருகையின்போது கூட்டுறவு சங்கத்தின் செயல்பாடுகள், விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர்க்கடன், வேளாண் இடு பொருட்கள் மற்றும் இதர சேவைகள் குறித்து அறிந்து கொண்டனர். மேலும், விவசாயிகளின் பொருளாதார முன்னேற்றத்தில் கூட்டுறவு சங்கங்களின் பங்கு குறித்து விளக்கப்பட்டது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

கோவையில் தடை செய்யப்பட்ட களைக்கொல்லியை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யக்கூடாது

வேளாண்மை இணை இயக்குநர் எச்சரிக்கை

கோயம்புத்தூர், நவ.24

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தடை விதிக்கப்பட்ட களைக் கொல்லியை இருப்பு வைத்திருந்தாலோ, விற்பனை செய்தாலோ கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர், மீ.தமிழ்செல்வி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பராகுவாட் டை குளோரைடு (Paraquat Dichloride) என்ற மருந்து நெல், பருத்தி, உருளைக்கிழங்கு, சோளம், மக்காச்சோளம், தேயிலை, காபி, திராட்சை, ஆப்பிள் மற்றும் ரப்பர் போன்ற பயிர்களின் இடை வரிசைகளில் அல்லது நடவுக்கு முன் களைகளைக் கட்டுப் படுத்தவும், அறுவடைக்கு முன் பயிர்களை உலர வைக்கவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் களைக்கொல்லி ஆகும். இது மனிதர்களுக்கு மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்தது. சிறிய அளவில் விழுங்கினாலோ, தோல் அல்லது கண்களில் பட்டாலோ, சுவாசித் தாலோ கடுமையான பாதிப்பு மற்றும் உயிரிழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதன் அதிகப்படியான நச்சுத்தன்மையால் மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு கடுமையான உடல்நல பாதிப்புகளும் உயிர் இழப்புகளும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, பூச்சிக்கொல்லி சட்டம், 1968-ன் கீழ் நிபுணர் குழு மற்றும் பதிவுக் குழுவின் ஆலோசனைக்குப் பிறகு, ஒன்றிய வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம் கடந்த செப்டம்பர் 22-ம் தேதி இந்தியாவில் பராகுவாட் டை குளோரைடு களைக்கொல்லியைத் தடை செய்து உத்தரவு வெளியிட்டுள்ளது. இதற்கு முன்பு வழங்கப் பட்ட பதிவுச் சான்றிதழ்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன. எனவே, கோவை மாவட்டத்தில் உள்ள பூச்சிக்கொல்லி மருந்து விற்பனை நிலையங்களில் தடை செய்யப்பட்ட பராகுவாட் டை குளோரைடு களைக்கொல்லி இருப்பு வைக்கப்பட்டுள்ளதா என வேளாண்மைத் துறை தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள் மூலம் தீவிரமாகத் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் உற்பத்தி, இருப்பு அல்லது விற்பனை கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட நிறுவனங் கள் மற்றும் விற்பனையாளர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே, தடை செய்யப்பட்ட இக்களைக்கொல்லியை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யக்கூடாது என வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

கந்தர்வகோட்டை வட்டாரத்தில் நெற்பயிரில் வறட்சியைத் தாங்கும் திறனையும் மேம்படுத்த ட்ரோன் மூலம் பிபிஎஃப்எம் (PPFM) தெளிப்பு

புதுக்கோட்டை, நவ.24

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரம், பழைய கந்தர்வகோட்டை கிராமத்தில், வேளாண்மைத் துறை மற்றும் வம்பன் அறிவியல் ஆராய்ச்சி நிலையம் இணைந்து, நெற் பயிரில் வறட்சியைத் தாங்கும் திறனை மேம்படுத்தும் வகையில், பிபிஎஃப்எம் (PPFM – Pink Pigmented Facultative Methylotrophs) எனப்படும் நன்மை தரும் நுண்ணுயிர் கரைசலை ட்ரோன் மூலம் இலைவழித் தெளிப்பு செய்யும் செயல்விளக்கம் மேற் கொள்ளப்பட்டது.



இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற வேளாண்மை இணை இயக்குநர் சண்முகஜெயந்தி பேசுகையில், தற்போது நிலவி வரும் எல்-நினோ (El Niño) பருவநிலை மாற்றத்தின் காரணமாக மழைப்பொழிவில் மாறுபாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் சம்பா பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் மற்றும் இதர பயிர்களில் மண்ணின் ஈரப்பதப் பற்றாக்குறை மற்றும் போதிய மழையின்மை காரணமாக பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்படக் கூடும் எனத் தெரிவித்தார்.

இத்தகைய சூழ்நிலையில், பயிர்களின் பசுமைத் தன்மையைப் பாதுகாக்கவும், வளர்ச்சியை ஊக்குவிக்கவும் பிபிஎஃப்எம் நுண்ணுயிர் கரைசல் தெளிப்பு ஒரு பயனுள்ள தொழில்நுட்ப மாக விளங்குகிறது என விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும், நடப்பு ராபி பருவத்தில் நீர்த்தேவை குறைவாக உள்ள பயறு வகைகள் மற்றும் சிறுதானியப் பயிர்களைச் சாகுபடி செய்து, கிடைக்கக்கூடிய நீர்வளத்தை சிக்கனமாகப் பயன்படுத்து மாறும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, வம்பன் அறிவியல் ஆராய்ச்சி நிலையத் தலைவர் முனைவர் தமிழ்செல்வன், பேசுகையில், பிபிஎஃப்எம் என்பது தாவரங்களின் இலைப்பரப்பில் வாழக்கூடிய நன்மை தரும் நுண்ணுயிரியாகும். இது பயிர்களின் வளர்ச்சியை ஊக்கு விப்பதுடன், இலைகளில் பச்சையத்தின் அளவை அதிகரித்து, வறட்சி மற்றும் அதிக வெப்பம் போன்ற இயற்கைச் சூழல் மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளைப் பயிர்கள் தாங்கும் திறனை மேம்படுத்த உதவுகிறது என விளக்கினார்.

மேலும், ஒரு ஏக்கருக்கு 200 மில்லி பிபிஎஃப்எம் கரைசலை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து, அதிகாலை அல்லது மாலை நேரங்களில் நெற்பயிரின் இலைகள் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். இவ்வாறு தெளிப்பதன் மூலம் பயிர்களின் வறட்சியைத் தாங்கும் திறனை மேம்படுத்தி, நீர்ப் பற்றாக்குறையால் ஏற்படக்கூடிய மகசூல் இழப்பைக் குறைக்கலாம் எனக் கூறினார். இக்கரைசல் தேவைப்படும் விவசாயிகள் அக்ரி கார்ட் இணையதளம் வாயிலாகவோ அல்லது வம்பன் அறிவியல் ஆராய்ச்சி நிலையத்தை நேரடியாக அணுகியோ பெற்றுப் பயனடையலாம் என்றும் தெரிவித்தார்.

இச்செயல்விளக்கத்தின் வாயிலாக, விவசாயிகளுக்கு நுண்ணுயிர் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத் தப்பட்டதுடன், பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் வறட்சியின் தாக்கத்தைக் குறைக்கவும், பயிர்களின் வளர்ச்சியையும் வறட்சியைத் தாங்கும் திறனையும் மேம்படுத்தவும் உதவும் தொழில்நுட்பங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், வம்பன் அறிவியல் ஆராய்ச்சி நிலையத் தைச் சேர்ந்த முனைவர் செந்தில்குமார், கந்தர்வகோட்டை வேளாண்மை அலுவலர் விக்னேஷ் மற்றும் புஷ்கரம், மதர் தெரசா வேளாண்மை அறிவியல் கல்லூரிகளைச் சேர்ந்த கிராமப்புற வேளாண் அனுபவப் பயிற்சி மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



வேலூர் விதைப்பரிசோதனை நிலையத்தில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு இணை இயக்குநர் ஆய்வு

வேலூர், நவ.24

வேலூர் விதைப்பரிசோதனை நிலையத்தில் இணை இயக்குநர் ஞ.சாந்தி, திடீர் ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின் போது சான்று விதை மாதிரிகள் 564 எண்கள், ஆய்வாளர் விதை



மாதிரிகள் 859 எண்கள் மற்றும் பணிவிதை மாதிரிகள் 709 எண்கள் ஆக மொத்தம் 2132 விதை மாதிரிகள் பெறப்பட்டு, இவைகளில் 2061 எண்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இதில் 169 விதை மாதிரிகள் கண்காணிப்பில் உள்ளது. நவம்பர் 26 முடிய விதை மாதிரிகள் இலக்கில் 89% விதை மாதிரிகள் பரிசோதனை செய்து சாதனை அடையப்பட்டுள்ளது. மேலும் இணை இயக்குநர், வேளாண்மை அலுவலர் வாரியாக விதை மாதிரி ஒதுக்கீடு பதிவேட்டினை ஆய்வு செய்து அதை குறித்து ஆலோசனை வழங்கினார்.

பின்பு வேலூர் விதைப்பரிசோதனை நிலையத்தின் கட்டுபாட்டு அலுவலரான காஞ்சிபுரம், விதைப்பரிசோதனை அலுவலர், விதைப்பரிசோதனை நிலைய செயல்பாடுகளான விதை மாதிரி பெறுதல், குறியீட்டு எண் வழங்குதல், புறத்தூய்மை கணக் கிடுதல், விதைப்பு செய்தல், முளைப்புத்திறன் கணக்கிடுதல், விதை மாதிரிகளின் பகுப்பாய்வு முடிவுகளை வெளியிடுதல் போன்றவை குறித்து விவரித்து கூறினார். மேலும் ஆய்வகத்தில் பயன்படுத்தப்படும் இயந்திரங்களான விதை தூய்மையின் தரத்தை கண்டறிய பயன்படுத்தப்படும் விதை தூய்மை பகுப் பாய்வு பலகை, விதைகளை பிரிக்க பயன்படுத்தப்படும் விதை பிரிப்பான், பிற இரக கலவன்களை கண்டறிய பயன்படுத்தப் படும் நெல் தோல் உரிக்கும் இயந்திரம், ஈரப்பதம் கண்டறிய பயன்படுத்தப்படும் தானிய ஈரப்பத மீட்டர் மற்றும் பிற இயந்திரங்கள் ஆகியவைகளின் செயல்விளக்கம் குறித்து செய்து காண்பிக்கப்பட்டது. முளைப்புத்திறன் பரிசோதனை முறைகளான மடிப்புத்தாள் முறை, தாள்களின் மேல் விதைப்பு முறை, மணல் மேல் விதைப்பு முறை, சுருள்தாள் முறை பற்றி விவரமாக எடுத்துரைக்கப்பட்டது.

வேலூர், விதைப்பரிசோதனை நிலையத்தின் வேளாண்மை அலுவலரான மு.சண்முகப்பிரியா, முளைப்புதிறன் அறையில் விதைகளின் முளைப்புதிறனை சரியாக கண்டறிய எவ்வளவு வெப்பநிலை, ஒளி இருக்க வேண்டும் என்பது பற்றியும், அதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர பயன்படுத்தப்படும் கருவிகள் பற்றியும் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. ஆய்வகத்தில் பெறப்படும் விதை மாதிரிகள் விதை காப்பறையில் பாதுகாக்கப் பட்டு, 6 மாதங்களுக்கு பிறகு சான்று விதை மாதிரிகள் மற்றும் ஆய்வாளர் விதை மாதிரிகளும், 3 மாதங்களுக்கு பிறகு பணி விதை மாதிரிகளும் பாதுகாப்பான முறையில் அழிக்கப்படுகிறது என்பதை பற்றியும் விளக்கி கூறப்பட்டது.

அமிர்தக் கரைசல் தயாரிப்பு குறித்து வேளாண் கல்லூரி மாணவர்கள் செயல்விளக்கம்



திருவாரூர், நவ.24

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டாரத்தில் நெடுஞ்சேரி கிராமத்தில் நவம்பர் 18 ஆம் தேதி வேளாண் கல்லூரி மாணவர்கள் சார்பில் அமிர்தக் கரைசல் (Amirtha Karaisal) எனப்படும் திரவ இயற்கை உரம் தயாரித்தல் மற்றும் பயன்படுத்துதல் குறித்த செயல் விளக்கம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், அமிர்தக் கரைசல் தயாரிக்கத் தேவையான மூலப்பொருட்கள், தயாரிக்கும் முறை, பயிர்களுக்குப் பயன் படுத்தும் விதம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து மாணவர்கள் விரிவாக எடுத்துரைத்தனர். இயற்கை வேளாண்மையில் உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி குறைந்த செலவில் தயாரிக்கக் கூடிய இடுபொருட்களின் முக்கியத்துவத்தையும் விளக்கினர்.

அமிர்தக் கரைசலைப் பயிர்களுக்குப் பயன்படுத்தும்போது, பொது வாக 10 சதவீதக் கரைசல் என்றளவில், ஒரு லிட்டர் அமிர்தக் கரை சலுக்கு 9 லிட்டர் தண்ணீர் கலந்து பயன்படுத்தலாம். இலைகளில் தெளிப்பதற்கு முன்பு கரைசலை நன்கு வடிகட்டி, பயிருக்கு ஏற்ற அளவு மற்றும் முறையை வேளாண் அலுவலரின் பரிந்துரைப்படி பின்பற்ற வேண்டும்.

ஒரு ஏக்கருக்குத் தேவையான தெளிப்புக் கரைசலின் அளவு பயிர், வளர்ச்சி நிலை மற்றும் தெளிப்பு முறையைப் பொறுத்து மாறு படும். எனவே, குறிப்பிட்ட அளவைப் பின்பற்றுவதற்கு முன்பு உள்ளூர் வேளாண் அலுவலரின் ஆலோசனையைப் பெறுவது சிறந்தது.

அமிர்தக் கரைசலின் நன்மைகள்

பயிர்களின் இலை மற்றும் தாவர வளர்ச்சிக்கு உதவக்கூடும். மண்ணில் நுண்ணுயிர்களின் செயல்பாட்டை ஊக்குவிக்க உதவக் கூடும். இயற்கை வேளாண்மையில் குறைந்த செலவில் தயாரிக்கக் கூடிய திரவ இடுபொருளாகப் பயன்படுகிறது. சில பூச்சிகளைத் தடுக்கும் தன்மை இருக்கக்கூடும். இருப்பினும், இது அனைத்து பூச்சிகளையும் கட்டுப்படுத்தும் எனக் கருதக்கூடாது.

தயாரித்த கரைசலை விதை நேர்த்திக்குப் பயன்படுத்துவதற்கு முன்பு, பயிர் மற்றும் விதை வகைக்கு ஏற்ற பரிந்துரைகளைப் பின்பற்ற வேண்டும். இச்செயல்விளக்கத்தின் மூலம் விவசாயிகள் அமிர்தக் கரைசலைத் தயாரிக்கும் முறை, அதற்குத் தேவையான உள்ளூர் மூலப்பொருட்கள் மற்றும் இயற்கை வேளாண்மையில் அதன் பயன்பாடு குறித்து நடைமுறை அறிவைப் பெற்றனர்.

இந்நிகழ்ச்சி இயற்கை இடுபொருட்களின் பயன்பாட்டை ஊக்குவித்து, நிலையான வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த சாகுபடி முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

வாழைக் கன்று நேர்த்தி பற்றி வேளாண் கல்லூரி மாணவர்கள் செயல் விளக்கம்!



திருநெல்வேலி, நவ.24

திருநெல்வேலி மாவட்டம், அம்பா சமுத்திரம், சிவந்திபுரம் கிராமத்தில் வசிக்கும் விவசாயி லீலா குமாரி வாழை தோட்டத்தில் மாணவர்கள் வாழைக்கன்று நேர்த்தி பற்றிய செயல் விளக்கத்தை வழங்கினர். இந்த செயல் விளக்கத்தினை கிள்ளிகுளம் வ.உ.சி. வேளாண்மை கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்களான கோபிகா.ர.கு, கோபிகா தினேஷ், ஹரிபிரணவ் ஸ்ரீ, ஹேமலதா, ஹனியா, கீர்த்தனா, கனகலெட்சுமி, கவி ஸ்ரீ, ஜனனி, கயல்விழி ஆகியோர் வழங்கினர்.

வாழைக் கன்றுகளின் அடிப்பகுதியுள்ள வேர்களை நீக்கிட வேண்டும். வாழைக் கன்றுகளின் மேல் பகுதியுள்ள தண்டுப் பகுதி 20 செ.மீ இருக்குமாறு தேர்ந்தெடுக்கவும். பிரித்தெடுக்கப் பட்ட வாழைக் கன்றுகளை 0.1% கார்பென்டாசிம் (1 கிராம்/லிட்டர் தண்ணீர்) கரைசலில் 15-20 நிமிடங்கள் நனைத்து வைக்க வேண்டும். வாழைக்கன்றுகளை 4 பங்கு களிமண் மற்றும் 5 பங்கு தண்ணீர் கொண்ட கரைசலில் நனைக்க வேண்டும். பின் 40 கிராம் கார்போஃபியூரான் 3ஜி துகள்களை வாழைக்கன்று களின் மீது தூவ வேண்டும். குறைந்தது 24 மணி நேரம் நிழலில் உலர்த்தி நடவும். நடவு செய்வதற்கு முன் வாழை உறிஞ்சிகளை முன் கூட்டியே நேர்த்தி செய்வதால் நோய் தடுப்பு, நூற்புழு கட்டுப்பாடு மற்றும் மேம்பட்ட தாவர நிறுவுதல் உள்ளிட்ட பல நன்மைகளை வழங்குகிறது. குறிப்பாக, ஃபுசேரியம் வாடல், மற்றும் நூற்புழுக் களின் தொல்லைகளைக் கட்டுப்படுத்த உதவும். இது இறுதியில் ஆரோக்கியமான மற்றும் அதிக உற்பத்தித் திறன் கொண்ட வாழை செடிகளுக்கு வழிவகுக்கிறது.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

மார்கழி பனி கார்த்திகையிலே தொடங்கி விட்டதா? அலசல் பதிவு



தமிழகத்திற்கு தேவையான பெரும்பாலான மழை வடகிழக்கு பருவமழை காலத்தில் தான் கிடைக்கிறது. இந்த கால கட்டத்தில் இயல்பான மழை பொழிவு என்பது 44.2 செ.மீ. அந்த வகையில் நடப்பாண்டில் எல்-நினோ தாக்கம் தீவிரமாக இருப்பதால், ஏற்கனவே தென் மேற்கு பருவமழை இயல்பை விட நாடு முழுவதுமாக குறைந்து போனது. ஆனால் வடகிழக்கு பருவமழை தமிழகம் உள்ளிட்ட தென்இந்தியா பகுதிகளுக்கு ஓரளவு கைகொடுக்கும் என்று கணிக்கப்பட்டது. ஆனால் விளைவுகள் ஏமாற்றத்தை தந்து உள்ளன.

அது என்ன? என்பதை பார்ப்போம்.

கடந்த அக்டோபர் மாதம் 1-ந் தேதி முதல் நேற்று வரையிலான நிலவரப்படி, தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட பகுதியில், 31.2 செ.மீ மழை பெய்திருக்க வேண்டும். ஆனால் இது வரை கிடைத்த மழை அளவு வெறும் 25.9 செ.மீ தான். அதாவது சாரசரி இயல்பை விட 17% குறைவாக தான் உள்ளது. ஏற்கனவே தென்மேற்கு பருவமழை தமிழகத்தில் இயல்பைவிட 20% குறைவாக பெய்து விவசாய பணிகளை பல இடங்களில் முடக்கி போட்டு விட்டது. ஆங்காங்கு குடிநீர் பிரச்சனைகளும் தலை தூக்கின.

கொட்டு பனிக்கான காரணம் என்ன?

தற்போது மழையை விரட்டும் கொட்டும் பனியை எட்டி பார்த்து விவசாயிகள் மத்தியில் கலக்கம் ஏற்பட்டுள்ளது. இனிமே மழை வருமா? வாரதா? என்ற அச்சம் தான்.

பொதுவாக தமிழகத்தில் பனிக்காலம் என்பது டிசம்பர் மாதத்தின் பிற்பகுதியில் அதாவது மார்கழியில் தொடங்கும். ஆனால் நடப்பாண்டில், தற்போதே பனியின் தாக்கம் பல இடங்

களில் உணர முடிகிறது. அதுவும் மலைப்பிரதேங்களில் (ஊட்டி, கொடைக்கானல்) சற்று அதிகமாக உறைபனி ஏற்படு வதை செய்தித்தாள்கள் வாயிலாக பார்க்க முடிகிறது.

உறைபனி ஏற்பட காரணம்?

வடஇந்திய பகுதியில் குளிர்காலம் தொடங்கி விட்டதால் அங்கிருந்து வீசும் வறண்ட மற்றும் குளிர்ந்த வடதிசை, வடமேற்கு திசைக்காற்று தென்னிந்திய பகுதிகளை நோக்கி நகர தொடங்கியுள்ளதால், அது இரவு நேர குறைந்த பட்ச வெப்ப நிலை கணிசமாக குறைக்கிறது.

மேலும் தரைகாற்றின் வேகம் குறையும் போது குளிர்ந்த காற்று ஒரே இடத்தில் தேங்கி அடர்த்தியான மூடு பனியையும் உருவாக்கிறது. இதன் காரணமாக தற்போது பனியின் தாக்கம் இருக்கிறது. அடுத்த மழை வந்தால் தான் பனிவிலகும்.

இப்படி இழுத்தடித்துக் கொண்டு இருக்கும் மழை இனி வரும் நாட்களிலாவது கை கொடுக்குமா? என்பதை பொருத்து இருந்து தான் பார்க்க வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

TNAU வேளாண் ஆலோசனைச் சேவை (AAS) குறித்து விவசாயிகளுக்கு தொழில்நுட்ப விழிப்புணர்வு



கோயம்புத்தூர், நவ.24

கோவை வேளாண்மைக் கல்லூரி மாணவிகள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (Rural Agricultural Work Experience Programme – RAWE) கீழ் ஆழியார் கிராமத்தில் தங்கி விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். அதன் ஒரு பகுதி யாக, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேளாண் ஆலோசனைச் சேவை (TNAU Agro Advisory Service – AAS) குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர். இந்நிகழ்ச்சியின் நோக்கம் நவீன தகவல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் விவசாயிகள்

சரியான நேரத்தில் வேளாண் ஆலோசனைகளை பெற்று, அவற்றைத் தங்களது சாகுபடியில் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதாகும்.

இந்நிகழ்ச்சியில், வேளாண் ஆலோசனைச் சேவை என்பது வானிலை முன்னறிவிப்பு மற்றும் வேளாண் அறிவியல் தகவல் களின் அடிப்படையில் விவசாயிகளுக்குப் பயிர் சாகுபடி தொடர்பான வழிகாட்டுதல்களை வழங்கும் சேவை என விளக்கப்பட்டது. மழைப்பொழிவு, வெப்பநிலை, காற்றின் வேகம், ஈரப்பதம் போன்ற வானிலைத் தகவல்கள் வேளாண் பணிகளைத் திட்டமிடுவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இத்தகவல்களின் அடிப்படையில் விதைத்தல், நடவு, நீர்ப்பாசனம், உரமிடுதல், களைக் கட்டுப்பாடு, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, அறுவடை போன்ற செயல்பாடு களுக்குத் தேவையான ஆலோசனைகளை விவசாயிகள் பெற முடியும் என எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனைகள் (Weather Based Agro Advisory) விவசாயிகளுக்கு எவ்வாறு உதவுகின்றன என்பது குறித்தும் விளக்கப்பட்டது. உதாரணமாக, மழை பெய்ய வாய்ப்புள்ள நாட்களில் உரமிடுதல் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து தெளித்தல் போன்ற பணிகளைத் தள்ளிவைப்பதன் மூலம் உள்ளீடு களின் வீணாவதைத் தவிர்க்கலாம். அதேபோல், வறண்ட வானிலை நிலவும் காலங்களில் நீர்ப்பாசனத்தைத் திட்டமிடவும், அதிக மழைப் பொழிவு எதிர்பார்க்கப்படும் காலங்களில் வயல்களில் முறையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தவும் இவ்வாலோசனைகள் உதவு கின்றன. தொடர்ந்து, TNAU AAS செயலியின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. செயலியைப் பதிவிறக்கம் செய்தல், அதில் கிடைக்கும் வேளாண் தகவல்களைப் பார்வையிடுதல் மற்றும் பயிர் சாகுபடி தொடர்பான ஆலோசனை களை அறிந்துகொள்ளும் முறைகள் விளக்கப்பட்டன. இதன் மூலம் விவசாயிகள் தங்களது பயிர்களின் வளர்ச்சிப் பருவம் மற்றும் நிலவும் வானிலைச் சூழலுக்கு ஏற்ப வேளாண் பணிகளைத் திட்டமிட முடியும் என எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல்களை முன்கூட்டியே கண்காணித்து உரிய தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. பயிர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்து மேலாண்மை, நீர் மேலாண்மை, பயிர் பாதுகாப்பு மற்றும் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் குறித்த அறிவியல் ஆலோசனைகளைப் பின்பற்றுவதன் மூலம் வேளாண் உற்பத்தித் திறனை மேம்படுத்த முடியும் என விளக்கப் பட்டது. வேளாண்மையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, தகவல்களை விரைவாகப் பெறுவதன் அவசியம், வானிலை மாற்றங்

களுக்கு ஏற்ப சாகுபடி முறைகளை மாற்றியமைத்தல் மற்றும் அறிவியல் அடிப்படையிலான முடிவுகளை மேற்கொள்வதன் முக்கியத்துவம் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் மூலம் TNAU வேளாண் ஆலோசனைச் சேவையின் முக்கியத்துவம், அதன் பயன்பாடு மற்றும் வானிலை சார்ந்த அறிவியல் ஆலோசனைகளைப் பயன்படுத்துவதன் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது. விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்று, நவீன தகவல் தொழில்நுட்பத்தை வேளாண்மையில் பயன்படுத்துவதன் அவசியத்தை அறிந்து பயனடைந்தனர்.



நிலக்கடலை விதையை பரிசோதனை செய்து தரமான விதைகளை பயன்படுத்த வேண்டுகோள்

புதுக்கோட்டை, நவ.24

புதுக்கோட்டை மாவட்ட நிலக்கடலை சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் நிலக்கடலை விதையை பரிசோதனை செய்து கீழ்க்கண்ட தொழில்நுட்பங்களை கடைபிடித்து அதிக மகசூல் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பரிந்துரைக்கப்படும் இரகங்கள்

தமிழ்நாட்டு இரகங்கள் – விஆர்ஜ 8, விஆர்ஜ 9, விஆர்ஜ 10, டி.எம்.வி 7, டி.எம்.வி 13, டி.எம்.வி 14, கோ-7, பி.எஸ்.ஆர் 2 குஜராத் இரகங்கள் – ஜி.ஜே.ஜி.9, ஜி.ஜே.ஜி.32, ஜி.ஜி.34, ஆந்திரா இரகங்கள் – கதிரி லெபாக்ஸி, தரணி.

நிலம் தயாரித்து படுக்கை அமைத்தல்

சட்டிக் கலப்பையால் உழுத பின் ஒரு ஏக்கருக்கு 5 டன் தொழு உரத்தை நிலத்தில் பரப்பி நன்கு உழவு செய்து 60 செ.மீ இடை வெளியில் 10 மீ முதல் 20 மீ அளவிற்கு படுக்கைகள் அமைக்கவும்.

உரமிடுதல்

தழைச்சத்து மற்றும் மணிச்சத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்து அடியுரமாக 50 சதவீதம் விதைத்த 20ம் நாளில், 25 சதவீதம் மற்றும் 42-ம் நாளில் 25 சதவீதத்தை அளிக்க வேண்டும். மேலும் தமிழக வேளாண்மை துறையின் நிலக்கடலை நுண்ணூட்டக் கலவையை அடியுரத்துடன் ஏக்கருக்கு 5 கிலோவினை ஊட்ட மேற்றிய தொழு உரத்துடன் கலந்து அளிக்கவும்.

விதையளவு மற்றும் இடைவெளி

அனைத்து இரகங்களுக்கும் விதையளவு ஒரு ஏக்கருக்கு 80 கிலோ வீதம் பயன்படுத்த வேண்டும். செடிக்குச் செடி 10 செ.மீ. வரிசைகளுக்கிடையே 30 செ.மீ இடைவெளி கடைபிடிக்க வேண்டும்.

விதை நேர்த்தி

உயிர்ப் பூஞ்சாணக் கொல்லிகள், உயிர் உரங்கள் ஆகியவற்றைப் பரிந்துரைக்கப்பட்ட அளவிலும் முறையிலும் பயன்படுத்தி, கீழ்க் கண்டவாறு விதை நேர்த்தி செய்யவும். ஒரு கிலோ விதையுடன் 4 கிராம் டிரைகோடெர்மா விரிடி கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

உயிர் உரங்களான ரைசோபியம் ஏக்கருக்கு 250 மி.லி. மற்றும் பாஸ்போபாக்டீரியா 100மி.லி. உயிர் உரங்களை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்ய வேண்டும். ஒரு கிலோ விதைக்கு திரம் அல்லது மான்கோசெப் போன்ற பூஞ்சாணக் கொல்லிகளை 4 கிராம் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். உயிர் உரம் மற்றும் டிரைக்கோடெர்மா விரிடியுடன் விதை நேர்த்தி செய்த விதைகளை பூஞ்சாண கொல்லியுடன் கலக்க கூடாது.

விதைத்தல் மற்றும் களை கட்டுப்பாடு

விதையை ஒரு குழிக்கு ஒரு விதை வீதம் விதைக்கும் கருவிகளை கொண்டு விதைக்கலாம். விதைத்த 20 மற்றும் 40-ம் நாட்களில் களை எடுக்க வேண்டும்.

ஜிப்சம் இட்டு மண் அணைத்தல்

களை எடுத்த பின் விதைத்த 40-45ம் நாளில் ஒரு ஏக்கருக்கு 160 கிலோ வீதம் ஜிப்சம் இட்டுமண் அணைக்க வேண்டும். இதனால் மண் இலகுவாகி நீர்ப்பிடிக்கும் திறன், காற்றோட்டம், மேம்பட்டு மண்வளம் பெருகுகிறது. நிலக்கடலை காய்களின் பருப்பு வளர்ச்சி மற்றும் நல்ல வளர்ச்சியடைந்த முழுமையான பருப்பு களைப் பெறுவதற்கு உதவுகிறது.

நீர் நிர்வாகம்

விதைத்த 4 அல்லது 5 நாட்களில் நீர்ப்பாய்ச்ச வேண்டும். விதைத்த 20 நாட்களுக்கு பின் பூக்கும் பருவத்தின் இரு முறையும் (26-60 நாட்கள்) காய் உருவாதலின் போது விதைத்த 60 நாட்களில் ஒரு முறையும் நீர் பாய்ச்ச வேண்டும். தெளிப்பு நீர்ப் பாசனம் 30 சதவீதம் வரை நீரை சேமிக்க உதவுகிறது.

பயிர் பாதுகாப்பு

நிலத்தை களைகளின்றி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். இளம் புழுக்களை கைகளால் சேகரித்து அழிக்கலாம். விளக்குப் பொறியை 3-4 வீதம் அமைத்து அந்துப் பூச்சியை கவர்ந்து அழிக்கலாம். விளக்குப் பொறி வைத்திருக்கும் பகுதியில் முட்டைக் குவியலை சேகரித்து அழிக்கலாம். வயலைச் சுற்றிலும் 30 செ.மீ. நீளம் மற்றும் 25 செ.மீ. அகலம் இருக்கும் அளவிற்கு குழிகள் அமைத்து அதன் மூலம் புழுக்களை அழிக்கலாம். அசாடிராக்டின் 600 மிலி ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும். இலைப்புள்ளி நோய் களைப் பூஞ்சாணக் கொல்லிகளைப் பயன்படுத்திக் கட்டுப்படுத்த லாம். உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளுடன் விதை நேர்த்தி செய்தும் கட்டுப்படுத்தலாம். முந்தைய பயிர்களின் கழிவுகளை ஆழ மாக உழவு செய்து நோய் பரப்பும் காரணிகளைக் கட்டுப்படுத்தலாம்.

விதைப்பரிசோதனை : கார்த்திகை மற்றும் மார்கழிப் பட்டம் நிலக்கடலை சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் கவனத்தில் கொள்ள வேண்டியவை தரமான நிலக்கடலை விதையானது 96 சதம் புறத்தூய்மையும் 9 சதம் ஈரப்பதத்தையும் 70 சதம் முளைப்புத் திறனையும் கொண்டிருக்க வேண்டும். விவசாயிகள் தங்களது கைவசம் உள்ள நிலக்கடலை விதைகளின் முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் அறிய புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள நம்பர் 30, இராமலிங்கம் தெரு, திருக்கோகர்ணம் 622 002 என்ற முகவரியில் செயல்பட்டு வரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் விதைப்பு குவியலில் இருந்து நிலக்கடலை 500 கிராம் என்ற அளவில் மாதிரி எடுத்து துணிப் பையினுள் இட்டு கட்டி அதனுள் முகவரி, குவியல் எண், இரகம் போன்ற விவரங்கள் அடங்கிய விபரச் சீட்டு வைக்கப்படவேண்டும். மேலும், ஈரப்பத சோதனைக்கு தனியாக 100 கிராம் எடுத்து சிறிய பாலீத்தீன் பையில் போட்டு காற்றுப் புகாத வண்ணம் பேக் செய்து பையினுள் வைத்து ரூ.80/- ஆய்வு கட்டணமாக செலுத்தி விதை களை பரிசோதனை செய்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டுமாறு விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் செ.சுமித்ராதேவி மற்றும் வேளாண்மை அலுவலர் மா.செல்வம் ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.

விவசாயிகள் தனித்துவ அடையாள அட்டை பெற அழைப்பு!

அரியலூர், நவ.24

அரியலூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் (பொ) த.ஜென்சி, விவசாயிகளை மத்திய அரசு மூலம் வழங்கும் விவசாயிகளுக்கான தனித்துவமான அடையாள அட்டையை (FR) பெற வேண்டுமாய் கேட்டு கொண்டுள்ளார். இந்த தனித்துவமான அடையாள அட்டை இனி வரும் காலங்களில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, சகோதரத் துறைகளில் மானிய திட்டங்களை பெற அவசியமாகிறது. மேலும் பாரதப் பிரதமரின் விவசாயிகள் கௌரவ நிதி திட்டத்தில் (PM KISAN) தொடர்ந்து பயன் பெற தனித்துவ அடையாள அட்டை மிகவும் அவசியமானதாக உள்ளது.

எனவே, அரியலூர் வட்டார விவசாயிகள் அனைவரும் வட்டாரத்தில் உள்ள வேளாண் விரிவாக்க மையத்திற்கு நேரடியாக சென்று பதிவு செய்து தனித்துவ அடையாள அட்டை எண் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. விவசாயிகள் இதற்காக தாங்கள் கொண்டு செல்ல வேண்டிய ஆவணங்களாக தங்களது ஆதார் அட்டை நில உரிமை சிட்டா மற்றும் ஆதார் எண் இணைக்கப் பட்டுள்ள கைபேசியை எடுத்துச் சென்று பதிவு செய்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

காய்கறிப் பயிர்களுக்கான இயற்கை விதை நேர்த்தி முறைகள்

ஊட்டி, நவ.24

நீலகிரி மாவட்டத்தில் கார்த்திகை பட்டத்தில் விதைப்பு மேற்கொள்ளும் விவசாயிகள் தாங்கள் பயிரிடும் காய்கறி விதைகளை இயற்கை முறையில் விதை நேர்த்தி செய்வதன் மூலம் நோய்களை கட்டுப்படுத்தி விதைகளின் தரத்தை உயர்த்தி நஞ்சில்லாமல் அதிக மகசூல் பெற்று விவசாயகள் பயன் பெறலாம். மேலும், விதை நேர்த்தி மூலம் தரமான விதைகள் கிடைப்பதால் வயல்களில் விதைக்கும் விதையின் அளவும் குறிப்பிடத்தக்க அளவு குறைக்கப்பட்டு இடுபொருள் செலவை குறைக்கலாம்.

நீர்/திரவ விதை நேர்த்தி

விதைகளை தண்ணீரை கொண்டு இரு முறைகளில் விதை நேர்த்தி செய்யலாம். முதலாவதாக, விதைகளை நீரில் 8 முதல் 12 மணி நேரம் ஊறவைப்பதன் மூலம் விதையின் உடலியல் காரணிகள் தூண்டப்பட்டு முளைப்புத் திறன் வேகம் எடுத்து, அனைத்து விதைகளும் சீராக முளைப்பது உறுதி செய்யப் படுகிறது. இரண்டாவதாக, 55°C வெப்பம் உள்ள நீரில் 20 முதல் 30 நிமிடம் விதைகளை ஊறவைப்பதால், விதைகளின் மேல் பரப்பிலும் விதை தொல்லியின் அடியிலும் இருக்கும் நோய் ஏற்படுத்தும் நுண்ணுயிரிகள் அழிக்கப்பட்டு விதைமூலம் பரவக் கூடிய நோய்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இம்முறையில் விதை நேர்த்தி செய்யும் போது நீரின் வெப்பம் 55°C-யை மிகாமல் இருப்பது அவசியம், இல்லையேல் அதிக வெப்பத்தின் காரணமாக விதைகள் சேதமடைந்து முளைப்புத்திறன் பாதிக்கப்படும்.

3 நாட்கள் நன்கு புளித்த மோரில் விதைகளை நன்றாக கலந்து 30 நிமிடம் ஊரவைத்து பின் நிலலில் உலர்த்தி விதைப்பதால் விதைகள் சீராகவும் வீரியமாகவும் முளைப்பதை காண முடியும். மேலும் 2% ஜீவாமிர்தம் அல்லது பஞ்சக் காவியாவுடன் 6 மணி நேரம் ஊரவைத்து விதைப்பதன் மூலம் பயிர்களின் நோய் எதிர்ப்பு திறன் தூண்டப்பட்டு சீராக முளைப்பது கண்டறியப்பட்டுள்ளது.

உயிரியல் சார்ந்த விதை நேர்த்தி

உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகலான ட்ரைக்கோடெர்மா மற்றும் சூடோமோனாஸ் ப்லோரசன்ஸ் அல்லது பேசிலஸ் சப்டிலீஸ் ஆகியவற்றை 1 கிலோ விதைக்கு தலா 4 கிராம் வீதம் நன்றாக கலந்து விதைப்பதால் பயிர்களை தாக்கக் கூடிய நோய் களை நீண்டகாலம் கட்டுப்படுத்தலாம்.

மேலும் உயிர் உரமான அசோஸ்பைரில்லம் 1 ஹெக்டர் விதைக்கு 600 கிராம் என்ற வீதம் வடிகட்டி ஆர வைத்த கஞ்சியுடன் கலந்து 30 நிமிடம் ஊரவைத்து நிலலில் உலர்த்தி விதைப்பதன் மூலம் யூரியா இடுவதை குறைத்து மகசூலை பெருக்கலாம். மேலும், குறிப்பாக உயிரியல் விதை நேர்த்தி செய்த விதைகளுக்கு இரசாயன விதை நேர்த்தி செய்யக்கூடாது. மேலே குறிப்பிட்ட இயற்கை முறைகளை பயன்படுத்தி விதை நேர்த்தி மூலம் நஞ்சில்லா உணவை உற்பத்தி செய்யலாம்.

விதைப்பரிசோதனை

விதை விநியோகம் செய்பவர்கள் மற்றும் விவசாயிகள் கார்த்திகை பட்டத்திற்கு தாங்கள் இருப்பு வைத்துள்ள விதை களின் புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் முளைப்புத்திறன் ஆகிய வற்றை பரிசோதனை செய்து விவரங்கள் பெற, உதகை, ரோஸ் கார்டனில், தோட்டக்கலை இணை இயக்குநர் வளாகத்தில் அமைந்துள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் தங்கள் முழு முகவரியுடன் பகுப்பாய்வு கட்டணமாக ரூ.80/- செலுத்தி போதிய விதைகளை கொடுத்து விதைப்பரிசோதனை செய்து விதையின் தரத்தை அறிந்து விதைப்பதன் மூலம் தரமற்ற விதையினால் ஏற்படும் தேவையற்ற செலவுகளை தவிர்த்துக் கொள்ளலாம் என எஸ்.நவீன், வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், உதகை அறிவுறுத்தினார்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



நெற்பயிர் காப்பீடு செய்ய வேளாண்மை உதவி இயக்குநர் அறிவுறுத்தல்

சிவகங்கை, நவ.24

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரத்தில் விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்துள்ள நெற்பயிருக்குப் காப்பீடு செய்து பயன்பெறலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் தா.மலர்வழி அறிவித்துள்ளார்.

திருப்புவனம் வட்டார விவசாயிகளுக்காக 2026-2027ஆம் ஆண்டுக்கான பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம், மத்திய மற்றும் மாநில அரசின் மானியத்துடன் ராபி சிறப்புப் பருவத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. மற்றும் எல்நினோ உள்ளிட்ட இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் மகசூல் இழப்பு இதர பாதிப்புகளில் இருந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத் தையும் பாதுகாத்துக் கொள்ள இப்பயிர் காப்பீடுத் திட்டத்தில் பதிவு செய்து பயனடையலாம்.

பயிர்க்கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத அனைத்து விவசாயி களுக்கும் ஒரே விதமான காப்பிட்டுத் தொகையும், பிரீமியத் தொகையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடன் பெறாத விவசாயிகளும் தங்களின் விருப்பத்தின் பெயரில் இத்திட்டத்தில் இணைந்து கொள்ளலாம்.

விருப்பமுள்ள விவசாயிகள் கீழ்கண்ட ஆவணங்களுடன் அனைத்துப் பொது சேவை மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிக் கிளைகளை அணுகி பதிவு செய்து கொள்ளலாம். கூடுதல் விபரங் களுக்குப் திருப்புவனம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு விவசாயிகள் பயிர் காப்பீடு செய்து பயன் பெறலாம்.

இத்திட்டத்தின் கீழ் காப்பீடு செய்வதற்க்கான கடைசி தேதி 01.12.26 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 1 ஏக்கருக்கு பயிர் காப்பீடு செய்ய வேண்டிய பிரிமீயம் தொகை ரூ.538.27.

தேவையான ஆவாணங்கள்

1. ஆதார் அட்டை நகல்
2. வங்கி கணக்கு எண் மற்றும் வங்கி பாஸ் புத்தகத்தின் முதல் பக்க நகல்
3. கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சிட்டா, அடங்கல்
4. முன்மொழி படிவம்.

ஆமணக்கு பிண்ணாக்கு பூச்சிப் பொறி குறித்து வேளாண் மாணவர்கள் செயல்விளக்கம்

தூத்துக்குடி, நவ.24

தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிகுளம் வ.உ.சிதம்பரனார் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இளநிலை இறுதி ஆண்டு மாணவர்கள் பரத் ராஜ், பரணிதரன், தீபக்குமார், தேவாரம், தனுஷ், தினேஷ், ஹரிராம், கோகுல் நாத், அனுகத் நாராயணன் ஆகியோர் களக்காடு சுற்றுவட்டாரப் பகுதிகளில் கிராமப்புற வேளாண் களப் பயிற்சியில் (RAWE) ஈடுபட்டு வருகின்றனர்.





இதன் ஒரு பகுதியாக, களக்காடு பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவரின் தென்னந்தோப்பில், தென்னை மரங்களைத் தாக்கும் காண்டாமிருக வண்டுகளைக் கட்டுப்படுத்தும் 'ஆமணக்கு பிண்ணாக்கு பொறி' (Castor Oil Cake Trap) அமைக்கும் முறை குறித்து விவசாயிகளுக்கு நேரடி செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

பொறி அமைக்கும் முறை மற்றும் பயன்கள்

தயாரிப்பு : அகலமான வாயுடைய மண்பானையில் 1 கிலோ ஆமணக்கு பிண்ணாக்கை 5 லிட்டர் தண்ணீரில் ஊறவைத்து, 3 முதல் 5 நாட்கள் வரை நொதிக்கச் செய்ய வேண்டும்.

நிறுவுதல் : பின்னர், பானையின் விளிம்பு தரைமட்டத்திற்குச் சமமாக இருக்குமாறு தோப்பில் ஏக்கருக்கு 2 முதல் 3 இடங்களில் மண்ணில் புதைத்து வைக்க வேண்டும்.

செயல்பாடு : நொதித்த ஆமணக்கு பிண்ணாக்கிலிருந்து வெளி வரும் பிரத்யேக வாசனையால் கவரப்படும் காண்டாமிருக வண்டுகள் பானைக்குள் விழுந்துவிடும்.

தென்னை மரங்களின் குருத்துப் பகுதியைத் தாக்கி சேதப்படுத்தும் காண்டாமிருக வண்டுகளை, சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் ரசாயன மருந்துகள் இன்றி, மிகக் குறைந்த செலவில் எளிதாகக் கவர்ந்து அழிக்க இம்முறை பெரிதும் உதவுகிறது. இதன் மூலம் தென்னை மரங்களைப் பாதுகாத்து மகசூலை அதிகரிக்கலாம் என மாணவர்கள் நேரடியாகச் செய்து காண்பித்தனர். மேலும், இத் தொழில்நுட்பம் குறித்த விவசாயிகளின் சந்தேகங்களுக்கும் மாணவர்கள் விளக்கமளித்தனர்.

குறைந்த செலவில் அசோலா வளர்ப்பு – விவசாயிகளுக்கு விழிப்புணர்வு !



தஞ்சாவூர், நவ.24

தஞ்சாவூர் மாவட்டம், காட்டுத்தோட்டம் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்ட மாணவிகள், நாஞ்சிக்கோட்டை கிராம விவசாயிகளுக்கு அசோலா வளர்ப்பு முறைகள் மற்றும் அதன் வேளாண் பயன்பாடுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். நீரில் மிதந்து வளரும் பெரணி வகைத்

தாவரமான அசோலாவின் முக்கியத்துவம், அதன் ஊட்டச்சத்து நிறைந்த தன்மை மற்றும் கால்நடைத் தீவனமாகப் பயன் படுத்துவதன் மூலம் தீவனச் செலவைக் குறைக்கலாம் என்பதையும் எடுத்துரைத்தனர்.

அசோலாவை தொட்டி அல்லது குழி முறையில் வளர்ப்பதற்கான செயல்முறைகள், குழி அமைத்தல், மண் மற்றும் மட்கிய மாட்டுச் சாணம் சேர்த்தல், நீர் நிரப்புதல் மற்றும் அசோலா தாய் வளர்ப்பைத் தூவி வளர்த்தல் போன்ற நடைமுறை வழிமுறைகள் விவசாயி களுக்கு விளக்கப்பட்டன. மேலும், நீர் தேங்கிய நெல் வயல்களில் அசோலாவை வளர்த்து, கோனோ வீடர் மூலம் மண்ணுடன் கலந்து இயற்கை உரமாகப் பயன்படுத்தும் முறையும் எடுத்துரைக்கப்பட்டது.

அசோலாவை மாடு, ஆடு மற்றும் கோழிகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த தீவனமாக வழங்குவதன் மூலம் கால்நடைகளின் தீவனச் செலவைக் குறைக்கலாம் என்றும், நெல் வயல்களில் பயன்படுத்து வதன் மூலம் மண் வளம் மற்றும் இயற்கை உரச் சத்து மேம்படும் என்றும் விளக்கப்பட்டது. அசோலா வளர்ப்பில் கடைப்பிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், முறையான அறுவடை மற்றும் கால்நடைகளுக்கு வழங்குவதற்கு முன் சுத்தமான நீரில் கழுவுவதன் அவசியம் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

அகவேலி எனும் இயற்கை உலகம் – RAWE மாணவர்கள் கல்விப்பயணம்!



பிச்சினிக்காடு, நவ.24

ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE – Rural Agricultural Work Experience) கீழ் பயிற்சி மேற்கொண்டு வரும் அன்பில் தர்மலிங்கம் வேளாண்க் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள், பிச்சினிக்காட்டில் அமைந்துள்ள அகவேலி இயற்கை அங்காடிக்கு கல்விப் பயணம் மேற்கொண்டனர்.

அங்கு அங்காடியின் இயக்குநர் அஜய்ராஜா மற்றும் மேலாளர் சரவணன் ஆகியோர் மாணவர்களுக்கு இயற்கை வேளாண் பொருட்களின் தயாரிப்பு மற்றும் விற்பனை தொடர்பான பல்வேறு செயல்முறைகள் குறித்து விளக்கமளித்தனர். குறிப்பாக, இயற்கை வேளாண் பொருட்களுக்கான மூலப்பொருட்களைக் கொள்முதல் செய்தல், அவற்றின் தரத்திற்கேற்ப விலை நிர்ணயம் செய்தல்,

மூலப்பொருட்களைப் பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டுதல் மற்றும் தயாரிப்புகளைப் பாதுகாப்பான முறையில் பொட்டலமிடுதல் போன்ற செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், இயற்கை வேளாண் விளைபொருட்களைத் தரமான தயாரிப்புகளாக மாற்றி, நுகர்வோருக்குக் கொண்டு சேர்ப்பதில் மேற் கொள்ளப்படும் பல்வேறு நிலைகள் மற்றும் அவற்றின் முக்கியத் துவம் குறித்தும் விளக்கினர். இப்பயணத்தின் மூலம் மாணவர்கள் இயற்கை வேளாண் பொருட்களின் மூலப்பொருள் கொள்முதல் முதல் பதப்படுத்துதல், விலை நிர்ணயம், மதிப்புக் கூட்டுதல் மற்றும் பொட்டலமிடுதல் வரையிலான நடைமுறைச் செயல்பாடுகள் குறித்த அறிவைப் பெற்றனர். மேலும், வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு களையும் அறிந்து கொண்டனர்.

பங்கேற்பு ஊரக மதிப்பீடு (PRA) மற்றும் வள வரைபடம் பற்றி RAWE மாணவர்கள் செயல்விளக்கம்



திருநெல்வேலி, நவ.24

திருநெல்வேலி மாவட்டம், பனங்குடி கிராமத்தில் கிள்ளிகுளம் வ.உ.சி. வேளாண்மை கல்லூரியின் இறுதி யாண்டு மாணவர்களான ஹரிஹர சுதன், ஹரிஷ் ராகவேந்திரா, ஜெய காந்த், ஜெயநாத், ஜெபிஸ்டோ எபி னேசர், ஜெய சரவணன், ஜெகன், கலையரசன் மற்றும் அசுத்தோஸ் குமார் ஆகியோர் பங்கேற்பு ஊரக மதிப்பீடு மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, மாணவர்கள் பனங்குடி கிராமத்தில் ஊயூபு முறையின் மூலம் பல்வேறு அடிப்படை விவரங்களைச் சேகரித் தனர். இதன் ஒரு பகுதியாக, கிராமத்தின் மக்கள் தொகை, கல்வி யறிவு விகிதம், முக்கியமாகப் பயிரிடப்படும் பயிர்கள், சாகுபடி நிலங்கள் மற்றும் சாகுபடி செய்யப்படாத நிலங்களின் சதவீதம் உள்ளிட்ட விவரங்களை கிராம நிர்வாக அலுவலர் (VAO) அலுவ லகத் திற்குச் சென்று சேகரித்தனர். மேலும், கிராம விவசாயிகளை நேரில் சந்தித்து, பயிர் சாகுபடியின் போது அவர்கள் எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தனர். விவசாயிகள் தெரிவித்த நீர்ப் பற்றாக்குறை, பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல், உர மேலாண்மை மற்றும் இதர சாகுபடி சவால்களைப் பிரச்சினை மரம் (Problem Tree) வரைபடம் மூலம் வகைப்படுத்தி விளக்கினர்.

அதனைத் தொடர்ந்து, கிராமத்தில் உள்ள இயற்கை வளங்கள், நீர்நிலைகள், விவசாய நிலங்கள், சாலைகள் மற்றும் இதர முக்கிய வளங்களைக் கண்டறிந்து வள வரைபடம் (Resource Map) தயாரித்தனர். இந்தக் களப்பணியின் மூலம் கிராமத்தின் சமூக, பொருளாதார மற்றும் வேளாண் நிலவரங்களை அறிந்து கொள்வதுடன், விவசாயிகளின் உண்மையான பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளை உருவாக்குவதற்குத் தேவையான அடிப்படைத் தகவல்களையும் RAWE மாணவர்கள் திரட்டினர்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன்
கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தலைப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kanniaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741